எடுத்துச் சென்று பயன்படுத்த அனுமதிக்க வேண்டுமென்ற கோரிக்கையை வைத்தார்கள். வண்டல்மண்ணை விவசாயிகள் எடுப்பதற்கு எந்தவிதமான ஆட்சேபனையும் இல்லை. எப்பொழுது வேண்டுமானாலும் அதை எடுத்துக் கொள்ளலாம் என்பதை இந்த நேரத்திலே தங்களின்வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. இராஜேந்திரன் அவர்கள்.*

திரு. இரா. இராஜேந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களை வணங்கி, குறிஞ்சிப்பாடி தொகுதிக்குட்பட்டிருக்கிற 10 ஆயிரம் ஏக்கர் விவசாய நிலங்களுடைய பயனைக் கருத்திலே கொண்டு, பெருமாள் ஏரியைத் தூர் வாரி, ஆழப்படுத்தித் தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள்மூலமாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்ற மாதம் கடலூரில் நடைபெற்ற பணிகளைப் பார்வையிடச் சென்றபோது, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அந்தக் கோரிக்கையை வைத்திருந்தார்கள். இந்த ஆண்டு அந்த ஏரியைத் தூர் வாருவதற்கான நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தங்களின் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 448, மாண்புமிகு உறுப்பினர் திருமதி க. அழகுவேலு, மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.*

448—

கால்நடை மருத்துவக் கல்லூரி

***4984—திருமதி க. அழகுவேலு:**

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கள்ளக்குறிச்சி தொகுதி, வி. கூட்டுச் சாலையில் கால்நடை மருத்துவக் கல்லூரியை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கால்நடை மருத்துவக் கல்லூரி வேண்டுமென்று கேட்டிருக்கின்றார்கள். கடந்த 2011-2012 ஆம் நிதியாண்டிலேயே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், எப்போதும் இல்லாத அளவிற்கு இரண்டு மருத்துவக் கல்லூரிகளை ஓராண்டிலேயே அறிவித்து, அந்த ஆண்டிலேயே அந்தக் கல்லூரிகள் தொடங்கப்பட்டன. (மேசையைத் தட்டும் ஒலி) இப்போது திருநெல்வேலியில் ஒன்றும், தஞ்சாவூரில் ஒன்றும் சிறப்பாக நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. எனவே, புதிதாக கால்நடை மருத்துவக் கல்லூரி அமைக்க வேண்டிய சாத்தியக்கூறுகள் எதுவும் தற்சமயம் இல்லை என்பதைத் தங்களின் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-35

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி க. அழகுவேலு அவர்கள்.

திருமதி க. அழகுவேலு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நித்தம், நித்தம் புதுத் திட்டங்கள் படைத்து, தமிழக மக்களின் ஏற்றத்திற்காக அயராது உழைத்து, உலகையே வியப்போடு திரும்பிப் பார்க்க வைக்கும் மந்திர சக்தி படைத்த மகா சக்தியே! எங்கள் புரட்சித் தலைவி அம்மா அவர்களே! (மேசையைத் தட்டும் ஒலி) அலைந்த காலம் உண்டு அலுவலகம் தேடி; அதிகாரிகள் வருகின்றனர் மக்களை நாடி! (மேசையைத் தட்டும் ஒலி) அனைவருக்கும் ஏற்றதாக அரசாங்க சட்டம்; அத்தனைக்கும் காரணம் ‘அம்மா’ திட்டம்! வாழ்வதற்கு வீடும் தந்து, காலம் முழுவதும் கஷ்டப்பட வேண்டாம் என்று கால்நடைகளும் கொடுத்து, கன்றோடு பசுவும் தந்து, தமிழக மக்களைக் கனிவோடு வாழ வைத்துக் கொண்டிருக்கும் தாயாக, தமிழ் மக்கள் மட்டுமின்றி (மேசையைத் தட்டும் ஒலி) சட்டமன்றப் பேரவை விதி 110-ன்கீழ், கால்நடைகளின் விதியையே மாற்றியமைத்த இதய தெய்வம்! தமிழகத்தின் காவல் தெய்வம்! மாண்புமிகு அம்மா அவர்களின் பாதம் பணிந்து வணங்குகிறேன்.

2013 மே 9]

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பத்தொன்பதாவது அகில இந்திய கால்நடைக் கணக்கெடுப்பின்படி, எங்கள் தொகுதியில் மாடுகளின் எண்ணிக்கை-2,05,000; வெள்ளாடுகள் எண்ணிக்கை-1,18,000; செம்மறியாடுகளின் எண்ணிக்கை-32,000. மாண்புமிகு அம்மா அவர்களின் உன்னதத் திட்டமான ஆடுகள் வழங்கும் திட்டத்தில், என்னுடைய தொகுதிக்கு மட்டும், 1,722 பயனாளிகளுக்கு, 6,888 வெள்ளாடுகளும்; கள்ளக்குறிச்சி கோட்டத்தில் 4,496 பயனாளிகளுக்கு, 17,984 ஆடுகளும் வழங்கப்பட்டுள்ளன; ஆட்டுப் பண்ணையில் 1,500 ஆடுகள் உள்ளன; 1,50,000 லிட்டர் பால் உற்பத்தியாகிறது. எங்கள் கள்ளக்குறிச்சி தொகுதியில் வி.கூட்ரோட்டில் உள்ள ஆட்டுப் பண்ணையில் கால்நடைத் துறைக்குச் சொந்தமான, சுமார் 1,866 ஏக்கர் நிலம் ஒரே இடத்தில் உள்ளது. இந்த இடம், விழுப்புரம், சேலம், பெரம்பலூர், கடலூர் ஆகிய நான்கு மாவட்டங்கள் சந்திக்கின்ற இடத்தில் உள்ளது. வட தமிழகத்தில் எங்கள் பகுதி மிகவும் பின்தங்கிய பகுதியாக இருப்பதால், இங்கு இருக்கின்ற மக்கள் கால்நடைகளையும், விவசாயத்தையும் நம்பி இருக்கின்றார்கள். தமிழகம் முழுவதும் சமமான வளர்ச்சி அடையச் செய்ய வேண்டுமென்பதற்காக நித்தம் பல திட்டங்களைத் தமிழகம் முழுவதும் வாரி வாரி வழங்கிக் கொண்டிருக்கும் மாண்புமிகு அம்மா அவர்களின் கருணைப் பார்வைக்கு, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கொண்டு சென்றாலே, நிச்சயம் மாண்புமிகு அம்மா அவர்கள் நிறைவேற்றித் தந்துவிடுவார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்களும் அங்கு வந்து ஆய்வு செய்திருக்கிறார்கள். ஆகவே, வி.கூட்ரோட்டில் ஒரு கால்நடை மருத்துவக் கல்லூரி அமைத்துத்தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள், மாண்புமிகு அம்மா அவர்களின் கருணைப் பார்வைக்கு எடுத்துச் சென்று, நிறைவேற்றித் தந்திட வேண்டுமாய் பணிந்து கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட சின்னசேலம் ஆட்டுப் பண்ணையை நானும், நம்முடைய அமைச்சர், அண்ணன் திரு. மோகன் அவர்களும் சென்று, அரை நாள் 1,800 ஏக்கர் நிலப்பரப்பு முழுவதையும், சுற்றிப் பார்த்தோம்.

அங்கு கால்நடை மருத்துவக் கல்லூரி அமைக்கக்கூடிய அளவிற்கு நிலமெல்லாம் இருக்கிறது. பிற்காலத்தில் கால்நடை மருத்துவக் கல்லூரி அமைக்க வேண்டிய சூழ்நிலை வந்தால், அந்தப் பகுதிக்கு முன்னுரிமை அளிக்கப்படும் என்பதைத் தங்கள்வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி க. அழகுவேலு அவர்கள்.*

திருமதி க. அழகுவேலு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வருங்காலத்தில் அந்தப் பகுதிக்கு கால்நடை மருத்துவக் கல்லூரி அமைத்துத் தர ஆவன செய்யப்படும் என்று அறிவித்த மாண்புமிகு அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் நன்றி கூறி அமர்கிறேன். நன்றி, வணக்கம்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ் அவர்கள்.*

திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'நாஞ்சில் நாடு' என்று பெயர் பெற்ற என்னுடைய மாவட்டத்தில், மீண்டும் ஒரு பசுமைப் புரட்சியை ஏற்படுத்திட, விவசாயிகள் நலனை பெருக்கிட, கால்நடைகளை அதிகமாக வளர்த்து வருகின்ற அந்த மாவட்டத்தில் கால்நடை மருத்துவமனை அமைத்துத் தந்தால் நிச்சயமாக இன்னும் அதிக அளவில் மாடுகளை வளர்ப்பதற்கு, கால்நடைகளைப் பெருக்குவதற்கு, விவசாயத்தை அபிவிருத்தி செய்வதற்கு வாய்ப்பு ஏற்படும். ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், கன்னியாகுமரி மாவட்டத்தில் கால்நடை மருத்துவக் கல்லூரி அமைக்க முன்வருவார்களா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ், உங்களுடைய மாவட்டத்தில் கால்நடை மருத்துவமனை அமைக்க வேண்டும் என்று கேட்கிறீர்களா அல்லது கால்நடை மருத்துவக் கல்லூரி அமைத்துத் தர வேண்டுமென்று கேட்கிறீர்களா?*

2013 மே 9]

திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: என்னுடைய மாவட்டத்தில் கால்நடை மருத்துவக் கல்லூரி அமைத்துத் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த ஆட்சிக் காலத்தில் கல்லூரி அமைக்கப்படும் என்று அறிவிப்பு செய்வார்கள். அது அறிவிப்போடு நின்றுவிடும்; கல்லூரி அமைத்துத் தர மாட்டார்கள். ஆனால், மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சிக் காலத்தில், (மேசையைத் தட்டும் ஒலி) கடந்த ஆண்டுதான் இரண்டு கால்நடை மருத்துவக் கல்லூரிகள் அமைக்கப்படும் என்று அறிவிப்பு செய்தார்கள். அறிவிப்பு செய்த அதே ஆண்டில், அந்த நேரத்திற்கு போதும் என்கின்ற அளவிலே, இரண்டு கால்நடை மருத்துவக் கல்லூரிகளைத் துவக்கி, அதுமட்டுமல்ல; 117 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, தற்போது பணிகள் நடைபெற்று வருகின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய தொகுதியில் உடனடியாக கால்நடை மருத்துவக் கல்லூரி அமைக்க வேண்டிய சாத்தியக்கூறுகள் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். எனினும், கால்நடை மருத்துவக் கல்லூரி அமைக்கும் நேரத்தில் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய பகுதியும் ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படும் என்பதைத் தங்கள்வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-40

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 449, மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் சி. விஜயபாஸ்கர், மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

449—

மாணவியர் விடுதி

***17664—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:**

மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—